மதிப்பு சீட்டு

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அ.வ.எண். 53/2023

1. R. சுப்பிரமணியன்
2. மாரியப்பன்
3. நல்லம்மாள்

... வாதிகள்

**/எதிர்/**

P. நல்லம்மாள் ... பிரதிவாதி

| | | | |
|---|---|---|---|
| 1. | வழக்கின் தன்மை | : | நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் |
| 2. | நீதிமன்றக்கட்டணத்திற்கும் ஆள்வரைக்கும் வழக்கு மதிப்பு | : | ரூ. 3,000/- |
| 3. | பிரிவும், உட்பிரிவும் | : | தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 27(c) |
| 4. | செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் | : | ரூ. 90/- |

/உத்தரவுபடி/
தலைமை எழுத்தர்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
குளித்தலை.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:— திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை**
**அசல் வழக்கு எண்.53/2023**

1. R. சுப்பிரமணியன், வயது 52/2023, த/பெ. ராமன், வசிப்பிடம் வேப்பங்குடி, வரவணை கிராமம், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
2. மாரியப்பன், வயது 65/2023, த/பெ. காளியப்ப செட்டியார், வசிப்பிடம் சுக்காம்பட்டி, பண்ணப்பட்டி கிராமம், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
3. நல்லம்மாள், வயது 64/2023, க/பெ. சின்னத்துரை, த/பெ. காளியப்பன், வசிப்பிடம் கொக்கம்பட்டி, அப்பிபாளையம், காக்காவாடி, கரூர் மாவட்டம்.

... வாதிகள்

**/எதிர்/**

P. நல்லம்மாள், வயது 69/2023, க/பெ. பழனிச்சாமி, வசிப்பிடம் ஜெகதாபி கிராமம், கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

... பிரதிவாதி

தாவா A, B, C அட்டவணை சொத்துக்களுக்கு செல்லும் D அட்டவணை சொத்தான வண்டிபாதையை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 21.03.2023, 30.03.2023, 05.04.2023, 11.04.2023 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | – | 11.04.2023 |
| வழக்கு மூலம் | – | 11.07.1996, 24.09.1952, 12.04.1966, 15.12.2022 மற்றும் 05.03.2023ம் தேதி மற்றும் பின்னிட்ட தேதிகளில் இந்நீதிமன்ற ஆள்வரை அதிகார எல்லைக்குட்பட்ட கடவூர் தாலுகா, கரூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. |
| வழக்கு மதிப்பீடு | – | ரூ. 3,000/– |

தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 27(c) of C.F.Act–ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.90/–

**<u>மதிப்பீட்டு விபரம்</u>**

**நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்**

இவ்வழக்கில் 1ம் வாதி கோரி உள்ள தாவா A அட்டவணை சொத்து பரிகாரத்திற்கு வாதி கருத்திலான மொத்த வழக்கு மதிப்பீடு ரூ.1000/-என கணக்கிட்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் (தற்போது வரை திருத்தப்பட்டது படி) பிரிவு 27(c)-ன் கீழ் ரூ.30/- செலுத்தப்படுகிறது.

இவ்வழக்கில் 2ம் வாதி கோரி உள்ள தாவா B அட்டவணை சொத்து பரிகாரத்திற்கு வாதி கருத்திலான மொத்த வழக்கு மதிப்பீடு ரூ.1000/- என கணக்கிட்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் (தற்போது வரை திருத்தப்பட்டது படி) பிரிவு 27(c)-ன் கீழ் ரூ.30/- செலுத்தப்படுகிறது.

இவ்வழக்கில் 2ம் வாதி கோரி உள்ள தாவா C அட்டவணை சொத்து பரிகாரத்திற்கு வாதி கருத்திலான மொத்த வழக்கு மதிப்பீடு ரூ.1000/- என கணக்கிட்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் (தற்போது வரை திருத்தப்பட்டது படி) பிரிவு 27(c)-ன் கீழ் ரூ.30/- செலுத்தப்படுகிறது.

இவ்வழக்கு என் முன்பாக 25.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தங்கம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

## சொத்து விபரம்

### A அட்டவணை

கரூர் மாவட்டம், கரூர் ரிடி தரகம்பட்டி சப்ரிடி, குளித்தலை வட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கும், பண்ணைப்பட்டி கிராம பஞ்சாயத்திற்கும் சம்பந்தப்பட்ட, மேற்படி பட்டா எண்.68 பண்ணைப்பட்டி கிராம புலத்தில் வீ.கா.மாரியப்பன் செட்டியார் நிலத்துக்கு கிழக்கு, மு.பழனிச்சாமி, முனியப்பன், முத்துசாமி செட்டி வகையறா நிலத்துக்கு வடக்கு, ராமாயி, சுப்பிரமணியன், மு.பழனிச்சாமி இவர்கள் நிலத்துக்கு மேற்கு, ராமசாமி, சுப்பிரமணியன் இவர்கள் நிலத்திற்கு தெற்கு இதற்கு அ.பு.சர்வே எண்.530/1 ஹெக்.0.53.5 க்கு ஏக்கர் 1 செண்ட் 32 ம் மாமூலுக்குள் அ.பு.சர்வே எண்.530/3 ஐ ஹெக்.0.01.5 க்கு ஏக்கர் 0.செண்ட் 04 ம் ஆக மொத்தம் ஏக்கர் 1 செண்ட் 36 அளவுள்ள நிலம் கிரையம் இதற்கு உண்டான சுத்துக்கால் பொருத்து மாமூல் பாதையும் இந்த கிரைய நிலத்தின் மேல்புறம் உள்ள தென் வடல் வண்டிப் பாதையில் இருந்து பழனிச்சாமி முனியப்பன் முத்துசாமி ஆ.மாணிக்கம் மாரியப்பன் இவர்கள் நிலத்தின் நடுமையத்தில் மாமூலாக செல்லும் பொது கிழ மேல் மாமூலாக வண்டிப்பாதை பாத்தியம் உட்பட கட்டுப்பட்டது. மேற்படி பாதை இந்த கிரைய நிலம் வரை மாமூலாக உள்ளது.

### B அட்டவணை

திருச்சி டிஸ்டிரிக்கு குளித்தலை சப் டிஸ்ட்ரிக்ட் சேர்ந்த கடவூர் ஜமீன் தற்காலம் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பண்ணைப்பட்டி கிராமம் குளத்தில் சக்பந்தி விபரம் அருணாச்சலம் செட்டியார் நிலத்துக்கு மேற்கு, வீரப்ப செட்டியார் நிலத்துக்கு வடக்கு, வேலாயுதம் செட்டியார் நிலத்துக்கு கிழக்கு, வீரப்ப செட்டியார் நிலத்துக்கு தெற்கு, அயன் பையாஷ் 80 நிர் புஞ்சை குழி 2,22 க்கு ஏக்.1 செண்ட் 26 உள்ள நிலமும் இதை சேர்ந்த சுத்துக்கல் வலவனாடி பல ஜாதி மனங்களுக்கு இதில் கண்ட நிலம் 58 நிர் ஒரே பட்டாவுக்கு சம்பந்தப்பட்டது பண்ணைப்பட்டி கிராமம் பஞ்சாயத்து போர்டு எல்லைக்குட்பட்டது. 2 ல் 8 திருத்தல் கிழக்கு முகமாக மாமூலாக நடக்கும் ஒத்தடி பாதையும்.

### C அட்டவணை

திருச்சி டிஸ்ட்ரிக்ட், குளித்தலை தாலுகா சப் டிஸ்ட்ரிக்ட் சேர்ந்த குளித்தலை தாலுக்கா தற்காலம் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பண்ணைப்பட்டி கிராமம் நிலங்களுக்கு சக்குபந்தி விவரம் வீர சொக்கன் செட்டியார் புஞ்சைக்கு தெற்கு, தங்கம்மாள் புஞ்சைக்கு மேற்கு, ஆ.முனியப்ப செட்டியார் புஞ்சைக்கு வடக்கு, க.தங்கம்மாள் புஞ்சைக்கு கிழக்கு இதில் அயன் புஞ்சை சர்வே 527/3 ல் ஏக்.1.306 இதுகளைச் சேர்ந்த வளவசூடி சொத்துக்கள் பொழி தரிசு அளவு ஜாஸ்தி பல ஜாதிமங்களும் பண்ணைப்பட்டி கிராம பஞ்சாயத்து போர்டு எல்லைக்கு

உட்பட்டது (பட்டா எண்.1730 உள்ள புல எண்.508/7, 508/9, 528/4, 530/4, 530/16, 526/3 B, C அட்டவணை கட்டுப்பட்டது)

**D அட்டவணை**

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பண்ணைப்பட்டி கிராமம் கோட்டப்புள்ளி பட்டி தென்வடல் ரோட்டிற்கு கிழக்காகவும், 2ம் வாதியின் நிலத்திற்கு வடபுறமும் முத்துச்சாமி செட்டியார் மற்றும் முனியப்பன் அவர்களின் சொத்திற்கு தெற்கு ஆகவும் 1ம் வாதி நிலத்திற்கு மேற்புறமாகவும் 12 அடி அகலம் உள்ள 750 அடி நீளமுள்ள மொத்தம் 9000 சதுர அடி அளவுள்ள வண்டி பாதை.

**செலவுத் தொகை விபரம்**

| வ.எண் | செலவுத் தொகை விபரம் | வாதிகள் | பிரதிவாதிகள் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | நீதிமன்றக் கட்டணம் | - | - |
| 2. | வழக்குரை/எதிர் வழக்குரை தயாரிக்க | - | 100.00 |
| 3. | வக்காலத்து | - | 10.00 |
| 4. | படிச் செலவு | - | - |
| 5. | இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவு | - | - |
| 6. | ஆணையர் கட்டணம் | - | - |
| 7. | வழக்கறிஞர் கட்டணம் (சீனியர் + ஜூனியர்) | - | 200.00 + 100.00 |
| | **மொத்தம்** | - | ***410.00** |

*பிரதிவாதி தரப்பில் நிர்ணயிக்கப்பட்ட செலவுத்தொகை ரூ.410.00

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 30ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**********************************

**PDM COURT, KULITHALAI**

**DECREE**

**O.S.No.53/2023**

**D.D.30.03.2026**

**AFT**

********************************